# Short Poems in Tamil

*by **Mr. A. Rajeswaran,** Sr. Manager CO/RMD, Indian Bank*

**சிலந்தி வலை**

பாழடைந்த வீட்டில்
புது கட்டுமானம்
–சிலந்தி வலை...!!!

**முயற்சி**

முழுதாய் உருகி முடிப்பதற்குள்
இருளை எரித்துவிட முயற்சிக்கிறது
–மெழுகுவர்த்தி...!!!

**பிரமாண்டம்**

பூமி தேடிப்பார்த்தது
எறும்பு புலப்படவில்லை...
வானம் தேடிப்பார்த்தது...
பூமி புலப்படவில்லை... !!!

**பதவி**

சிங்கத்திற்கு தெரியாது
மனிதனால் தான்
–அரசனாக
அறிவிக்கப்பட்டது...!!!

**(ஏ) மாற்றம்**

பசி வயிற்றைத் தின்ன
ரொட்டித் துண்டு
தேடிப்பார்த்து
கிட்டாமல் போகும்
ஏமாற்றத்தில்
சுகம் மீறி நிற்கிறது
ரொட்டியை தீர்த்தது
குழந்தை என்று
தெரிந்தவுடன்...!!

**புல்லாங்குழல்**

உடலெல்லாம் துளைபட்ட பின்னும்
வலிபட்ட சுவடில்லாமல் இசைக்கிறது
–மூங்கில் குழல் ...!!!

**கொலு**

எண்ணிக்கை வளரும் பொம்மைகள்
உயரம் வளரும் கொலு படிக்கட்டுகள்
அப்படியே இருக்கிறது குயவன் வாழ்க்கை!!!

**வாழ்க்கை**

புரியாத வழி
புதிரான திருப்பங்கள்
நில்லாத பயணம்
நிலையில்லா முடிவு
தெரிந்தேதான்
தொடர்கிறது
நம்பிக்கை சுமந்த
வாழ்க்கை...!

**கோயில் திருவிழா**

கூடிக்கொண்டாடினான்
மனிதன்
தனிமை அழிந்தது
கடவுளுக்கும் சேர்த்து...!!!

## கசப்பு
வேளைக்கு உணவு ;
அழகை ரசிக்க ஆட்கள்
ஆனாலும் கசக்கிறது வாழ்வு
-கூண்டுக்கிளிக்கு!!!

## கட்டுமானம்
விவசாய நிலம் அழித்து
வேகமாய் கட்டுகிறார்கள்
-வேளாண் பல்கலை...!!!

## பார்வை
ஏக்கப் பெருமூச்சுடன்
பாலை வனம் கடக்கிறான்
-கட்டுமான ஒப்பந்தக்காரன்

## சுனாமி
நீரின் தாகம்
தீர்கிறது உயிர்குடித்து
-சுனாமி

## முதியோர் இல்லம்
பணி நிமித்தம்
வெளியே சென்று விட்ட
மகன், மருமகள்....

பக்கத்து வீட்டு
பெண்ணுக்கு காத்து
வீதியில் தங்கிவிட்ட பேரன்...

படிக்கிறேன் என்று
பள்ளி சென்று விட்ட பேத்தி...

இவர்கள் விட்டுச் சென்ற
இறுக்கத்தை மட்டும்
தனிமையில் சுவைத்த
கிழவிக்க....

சொர்க்கத்தை காட்டுகிறது...
-முதியோர் இல்லம்...!!!